சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – திருவள்ளுவர் திருநாள் விருதுகள் – 2021–ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது மற்றும் 2020–ஆம் ஆண்டுக்கான பேறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது ஆகிய விருதுகள் வழங்குதல் – விருதாளர்களை தெரிவு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(குவ 1.2)த் துறை

அரசாணை (நிலை) எண்.3

நாள் 04.01.2021
சார்வரி, மார்கழி – 20
திருவள்ளுவராண்டு – 2051

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.7, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ1.2)த் துறை, நாள்.14.01.2020.

படிக்க:

2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.8014/ தமிழ்–1/2020, நாள் 03.12.2020.

******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2020–ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது மற்றும் 2019–ஆம் ஆண்டுக்கான பேறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது, மற்றும் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது ஆகிய விருதுகளை வழங்குவதற்கு விருதாளர்களை தெரிவு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2021–ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது மற்றும் 2020–ஆம் ஆண்டுக்கான பேறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது மற்றும் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது ஆகிய விருதுகளை வழங்க விருதுகளுக்குரியவர்களை தெரிவு செய்து வழங்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவை ஏற்று, 2021–ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது மற்றும் 2020–ஆம் ஆண்டுக்கான பேறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது மற்றும் முத்தமிழ்க் காவலர்

கி.ஆ.பெ. விசுவநாதம் விருது ஆகிய விருதுகளை கீழே அவ்விருதுகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள விருதாளர்களுக்கு வழங்க தெரிவு செய்து அரசு ஆணையிடுகிறது:-

| வ .எண் | விருது | விருதாளர் |
|---|---|---|
| 1. | திருவள்ளுவர் விருது – 2021 | முனைவர் வைகைச்செல்வன் |
| 2. | பேறிஞர் அண்ணா விருது – 2020 | அமரர் திரு. கடம்பூர் எம்.ஆர். ஜனார்த்தனன் |
| 3. | பெருந்தலைவர் காமராசர் விருது – 2020 | முனைவர் ச. தேவராஜ் |
| 4. | மகாகவி பாரதியார்விருது – 2020 | கவிஞர் பூவை செங்குட்டுவன் |
| 5. | பாவேந்தர் பாரதிதாசன் விருது – 2020 | திரு. அறிவுமதி (எ) மதியழகன் |
| 6. | தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது – 2020 | திரு. வி.என். சாமி |
| 7. | முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது – 2020 | முனைவர் வீ. சேதுராமலிங்கம் |

4. மேலும், தமிழக அரசு சார்பில் திருவள்ளுவர் திருநாள் விழாவில் மேற்படி விருதுகளுடன், விருதாளர் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்ச ரூபாய் விருதுத் தொகை, ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடை வழங்கப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை –8.
உரிய விருதாளர்கள். (தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை –9/18.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப்பண்பாடு) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
04.01.2021